**MCOP No. 238/2022**

**Deposition of R.W.1**

**Dated : 12.06.2023**

**Name : Thiru. Sundar**

Solemnly affirmed by Thiru.P.A.Sivapadman

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த அன்று சுமார் 1 1/2 கி.மீட்டர் தூரம் மனுதாரர் ஓட்டி வந்த வண்டியை பின்தொடர்ந்து வந்தேனா என்றால், ஆமாம். அதற்கு அவசியம் என்ன எனறால், அவசியம் எதுவும் இல்லை. விபத்திற்கு பிறகு ஆம்புலன்சில் என்னை ஏற்றி செல்லும் வரை நான் சம்பவ இடத்தில் இருந்தேனா என்றால், ஆமாம். காவல்துறையினர் இந்த வழக்கு சம்பந்தமாக STC No.640/2022 னினை தாக்கல்செய்து அதில் நான் அபராதம் செலுத்தி உள்ளேன் என்றால், சரிதான். நான் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு, கூட்டாக இழப்பீடு வழங்கும் பொறுப்பிலிருந்து தப்பிபதற்காகவும், நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கிலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

4ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

என்மீது தவறு இல்லை எனில் STC No.640/2022 ல் 03.11.2022 அன்று குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தி இருக்க மாட்டேன் என்றால், சரியல்ல. நான் விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிசென்றேன்என்றால், சரியல்ல. பழகுநர் ஓட்டுநர் உரிமம் வைத்து இருந்தேன். என்மீது தவறு இல்லை எனில், மறுவிசாரணை வேண்டி மாவட்ட கண்காணிப்பாளரிடமோ அல்லது பூதப்பாணடி நடுவர் நீதிமன்றத்தில் மனு செய்திருப்னே் என்றால், சரியல்ல. விபத்தில் எனக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றாலும், நான் உள்நோயாளியாக இலலை என்றாலும், வேண்டுமென்றே இந்த வழக்கிற்காக எனக்கு காயம் ஏற்பட்டதாக ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி நான் இன்றுவரை மனுதாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். விபத்திற்கு எனது

அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையே காரணம் என்றாலும், வழக்கிலிருந்து தப்பிதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. பழகுநர் ஓட்டுநர் உரிமம் நான் வைத்திருந்தேன் என்றால், பின்புறம் செல்லதக்க ஓட்டுநர் உரிமம் உடைய ஒரு நபரை வைத்துக்கொண்டுதான் வண்டி ஓட்ட வேண்டும் என்றால், எனக்கு தெரியாது. 21.04.2022 விபத்து தேதி அன்று எனது வண்டிக்கு 3ம் எதிர்மனுதாரரிடம் செல்லதக்க காப்பீடு இருந்தது என்றால், சரிதான். இந்த விபத்திற்கு நான்தான் காரணம் என்பதால், எனது காப்பீட்டு நிறுவனம்தான் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றால், சரியல்ல.